[செல்வி ஜெ ஜெயலலிதா] [2005 மார்ச் 17

இதன்படி, இந்தத் தனி ஊதிய வகையிலான உயர்வைச் சேர்த்து இவர்கள் பெறும் மாத ஊதியம் 1,513 ரூபாயிலிருந்து 1,835 ரூபாயாக உயரும். *(மேசையைத் தட்டும் ஒலி)* 84,473 சத்துணவுத் திட்ட அமைப்பாளர்கள் மற்றும் அங்கன்வாடிப் பணியாளர்கள் ஆகியோர் இதனால் பயன்பெறுவர். இதற்காக, ஆண்டு ஒன்றுக்கு 32.64 கோடி ரூபாய் செலவு ஆகும். இந்தத் தனி ஊதியம் 1-4-2005 முதல் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றின்கீழ் பணிபுரிவோர் மேலும் சிறப்புடன் பணிபுரிய இந்தச் சலுகைகள், ஊக்கமும் உற்சாகமும் ஊட்டுவதாக அமையும் என்று தெரிவித்து அமைகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

3. தகவல் கோரல்

(அ) மக்களவைத் தலைவர் கூட்டியுள்ள கூட்டத்தில் பேரவைத் தலைவர் கலந்துகொள்வது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்.

முற்பகல் 11-10

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றங்களுக்கும், நீதித் துறைக்கும் மோதல் வலுத்து வருகிறது. மக்களவைத் தலைவர் அவர்கள், பேரவைத் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டியிருக்கிறார்கள், விரிவாக விவாதிப்பதற்காக. அதிலே இந்த அரசின் நிலை என்ன? நம்முடைய பேரவைத் தலைவர் கலந்துகொள்ளவிருப்பதாக பத்திரிகைகளிலே செய்தி படித்தேன். அந்தச் செய்தி சரிதானா? *(குறுக்கீடு)* சரிதானா என்று கேட்டேன். I am not committing. பத்திரிகைகளில் செய்தி படித்தேன் என்றேன். பத்திரிகையில் படித்தேன். கலந்துகொள்ளவிருக்கிறாரா என்பதையும் நான் அறிய விரும்புகிறேன். அரசின் நிலை என்ன என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.